1994 மார்ச் 22]

சொல்லியிருக்கலாம். வெளிநாட்டு நிறுவனங்கள் இதை எப்படி புதிய முறையில் சீர்படுத்த முடியும் என்பதை ஆராயும் நிலையில், எழில்மிகு சென்னை 2000 என்ற ஒரு திட்டத்தை நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் இந்தத் திட்டத்தை மிகப் பொலிவோடு நடத்த வேண்டும் என்பதுதான் இந்த அரசின் நோக்கம். ஆகவேதான், பல்வேறு முறைகளிலே ஆய்வு செய்து, எது சரியாகப் படுகிறது என்று ஆயுவு செய்ததற்குப் பின்னால், மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர், புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, எந்த முறையிலே சீரமைக்கலாம் என்பதற்கு இறுதி வடிவம் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முற்பகல் 10.35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, இந்த கூவம், பக்கிங்ஹாம் கனால் எங்கு தொடங்கி, எங்கு முடிகிறது? ஏதாவது ஒரு இடத்தில் இந்த இரண்டும் கலக்கிறதா? இவைகளுக்கு எப்படி இந்தப் பெயர்கள் வந்தன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திட்ட சம்பந்தமான கேள்வியாக இருக்கின்ற காரணத்தாலே, அதனுடைய மதிப்பீடுகள், அதனுடைய விவரங்கள் பற்றிதான் குறிப்பு தந்திருக்கிறார்கள். கூவத்தின் சரித்திரத்தைப் பற்றி அறிய வேண்டுமானால், தனியாக இதற்கு ஒரு கேள்வி கேட்டால், அந்தச் சரித்திரம் முழுவதும் இந்த அவையில் வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 68, திரு.ஓ.எஸ். அமர்நாத், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பற வளர்ச்சித்துறை அமைச்சர்.

68 —

குடியிருப்பு வாடகைக் கட்டுப்பாடு வழக்குகளை விசாரிக்க மதுரையில் தனி நீதிமன்றம் அமைத்தல்

16584** **திரு. ஓ. எஸ். அமர்நாத்:

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை நகரில் குடியிருப்பு வாடகைக் கட்டுப்பாடு வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரையிலே வாடகைக் கட்டுப்பாடு வழக்குகளைத் தாக்கல் செய்யவேண்டும் என்றால், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலே தாக்கல் செய்கிறார்கள். மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் இரண்டு இருக்கியன்றன. மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலே அசல் வழக்கு என்று சொல்லப்படுகிற ஒரிஜினல் சூட்டையும் அங்கேதான் தாக்கல் செய்கிறார்கள். இந்த மாதிரி வழக்குகளைத் தாக்கல் செய்கிற நேரத்திலே, அங்கே குடியிருப்பவர்களை காலி செய்யவேண்டிய வழக்குகளையும் இந்த நீதிமன்றதிலேதான் தாக்கல் செய்வதால், அதிகமான காலதாமதம் ஏற்படுகிறது. ஒரு வழக்கை 1994 ஜனவரி மாதத்திலே தாக்கல் செய்தால், அது லிஸ்ட் என்று சொல்கிற, வழக்கு விசாரணைப் பட்டியலில் வருவதற்கு 10 ஆண்டுகள் ஆகின்றன. அதற்கு பிறகு, விசாரணை முடிந்து வருவதற்கு 20 ஆண்டுகள் ஆகின்றன. ஆகவே, ஜெனரேசன் கேப் என்று சொல்கிறோமே, அந்தத் தலைமுறை இடைவெளி வந்துவிடுகிறது. எனவே, இந்தக் காரணத்தை மனதில் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மதுரையில் தனியாக வாடகைக் கட்டுப்பாடு வழக்குகளை விசாரிப்பதற்கு ரெண்ட் கன்ட்ரோல் என்ற சிறப்பு நீதிமன்றம் அமைப்பதற்கு வழி செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கட்டிடங்கள் குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தின்கீழ் எழும் வழக்குகள் யாவும், உரிமையியல் வகையைச் சார்ந்தவையாகும். இத்தகைய உரிமையியல் வழக்குகளை விசாரிப்பதற்கு மதுரை மாநகரில் தனி நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை என்று சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய பதிவாளர் தெரிவித்துள்ளார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை போன்ற பெரிய நகரங்களில் ரெண்ட் கனட்ரோல் என்ற தனி நீதிமன்றம், நீதிபதி, அமைப்பு இருக்கிறது. காலப்போக்கில் மதுரை நகரில் மக்கள் தொகை இன்றைக்கு 15 முதல் 20 லட்சம் வரை உள்ளது. மதுரையிலே சாதாரணமாக வாடகைதாரர்களை காலி பண்ணவேண்டும் என்றால், அது சிரமமாக இருக்கிற காரணத்தாலே, அங்கே வேறுவிதமாக காலிசெய்யவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. கிரிமினல் R.C.O.P. என்று சொல்வோமே, அதைப்போன்று, கிரிமினல் போர்சை உபயோகப்படுத்தி, அவர்களை காலி பண்ணக்கூடிய நிலைமை எல்லாம் இருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு, உடனடியாக வருகின்ற ஆண்டிலாவது, சிறப்பு தனி நீதிமன்றம் வாடகைக் கட்டுப்பாடு வழக்குகளை விசாரிப்பதற்கு, இந்த அரசு அமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதினுடைய

1994 மார்ச் 22]

நோக்கமே, குடியிருப்பவர்கள், வீட்டுச் சொந்தக்காரர், இருவருமே உரிமையியல் நீதிமன்றங்களை நாடி., தங்களுக்கு உரிய பரிகாரத்தைத் தேடிக்கொள்ள வேண்டும் என்பதற்குத்தானே தவிர, அவர்கள் கிரிமினல் போர்சை உபயோகப்படுத்தவேண்டும் என்பதற்காக அல்ல. மதுரை மாநகரத்திலே இதுபோன்று ஒரு சிறப்பு நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக் கொண்டுள்ளார். இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிற பெருவாரியான நகராட்சிப் பகுதிகளிலே எந்தெந்த இடங்களிலே இந்தச் சட்டத்தினுடைய எல்லை அமுலாக்கப்படுகிறதோ, அந்தப் பகுதிகளிலே இருக்கிற மாவட்ட முன்சீப் கோர்ட், அந்த மாவட்ட உரிமையியல் நடுவராக இருக்கக்கூடிய நீதிபதி அந்த வழக்குகளை விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இதுகுறித்து தனியாக சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கக்கூடிய பரிசீலனை சென்னை மாநகரத்தைத் தவிர, வேறு எந்த இடத்திலும் இல்லை என்று சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 69, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

69—

நாகர்கோவிலில் எலக்ட்ரானிக் தொழிற்பேட்டை அமைக்க திட்டம்

***2185**—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை:*

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் எலக்ட்ரானிக் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத்தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : இல்லை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டம் படிப்பு அறிவைப் பொறுத்த வரையிலே, இன்று தமிழகத்தில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. அதைப்போல, பெண்கள் படிப்பு அறிவில் இன்று, தமிழகத்தில் முதல் இடத்திலே வகிக்கிறது. ஆனால் படித்து வேலையில்லாத பட்டதாரிகள் என்ற அளவிலே அதிகம் பேர்கள் உள்ளனர். தொழிற்துறையில் மிகவும் பின்தங்கியுள்ள குமரி மாவட்டம் முன்னேறவேண்டும் என்பதற்காக, மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், 400 கோடி என்ற அளவில் ஒரு ரப்பர் தொழிற்சாலைக்கு அனுமதி அளித்திருந்தார்கள். அதேபோல் ஒரு சர்க்கரைத் தொழிற்சாலை அமைப்பதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். அதற்காக குமரி மாவட்ட